திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய நடராஜபுரம் ஊராட்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ்.எம்.கருணாநிதி தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டார். ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. என். சேகரன் மாநில அணி நிர்வாகி கவிஞர் சல்மா மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பெண்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் சம்பளம் கொடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் காரியப்பட்டியில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ ஏ ஆறுமுகம் ,ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு கண்டன கோஷம் எழுப்பினர்.

100 நாள் வேலை திட்டப் பணியாளர்கள் உழைப்புக்கான ஊதியத்துக்கு காத்திருக்கின்றனர்!

தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதி வந்து சேரும் வரை தொடர்ந்து போராடுவோம்!

கோவில்பட்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி கண்டன உரை!

கோவில்பட்டி, மார்ச் 31- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்,100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு விடுவிக்க வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் காலம் தாழ்த்தி வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கோவில்பட்டி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் (29.03.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் நடைபெற்றது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டு, கண்டன உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தின் வழியாக அவர்களுக்கு வரவேண்டிய ஊதியம் சம்பளம் சரியாக வருவதில்லை. அந்த பணத்தை எங்களுக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று தொடர்ந்து தமிழ் நாட்டு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார்.

கடந்த மாதம் கூட நானும், தமிழ்நாட்டின் நிதி அமைச்சரும், ஒன்றிய நிதி அமைச்சரை நேரில் சந்தித்து இதற்காக கோரிக்கை வைத்தோம். அதேபோல், ஒன்றிய விவசாய துறை அமைச்சரையும், சந்தித்து எங்களுக்குப் பல மாதங்களாக ஊரக வேலை உறுதிதிட்டத்துக்கான தொகை வரவில்லை. அதனால் அந்தத் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களையும் சம்பளம் தர முடியவில்லை. பெண்களும் ஆண்களும் உழைத்து விட்டு, அந்த உழைப்புக்கான ஊதியம் வராமல் காத்துக் கிடக்கின்றனர் என தெரிவித்தோம். அப்போது இன்னும் சில வாரங்களிலேயே அந்த பணத்தை கொடுத்து விடுவோம் என்று கூறினார். ஆனால், இன்னும் இதுவரை கொடுக்கவில்லை.

5 மாதங்களாகத் தரவில்லை!

முதல்வரின் அறிவுறுத்தலின் பேரில், இதை நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கேள்வி நேரத்தில் தமிழ்நாட்டுக்கு வேலை உறுதி திட்டத்திற்குத் தர வேண்டிய பணம் ஏறத்தாழ ரூ.4034 கோடியை தர வேண்டும். இந்த பணம் 5 மாதங்களாகத் தரப்படவில்லை என்று கேள்வி எழுப்பினோம். அதற்கு சரியான பதில் இல்லை. அதனால் நான் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயே தி.மு.க. எம்.பிக்கள் போராட்டத்தில் இறங்கியது. எங்

களது போராட்டத்திற்குப் பின்னர் எதிர்க் கட்சிகள் அத்தனை பேரும் இணைந்து போராடினர்.

அப்போது, அவை ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர்கள் எங்களை சந்தித்து தயவுசெய்து அவையை நடத்துங்கள் அனுமதிக்க வேண்டும். நிச்சயமாக ஏப்ரல் முதல் வாரத்தில், பணம் வந்துவிடும் என்று முதல்வரிடம் கூறுங்கள் என உறுதி அளித்தனர். ஆனால், அந்த உறுதியை எந்த அளவுக்கு நாம் நம்ப முடியும் என்று தெரியவில்லை. காரணம் அவர்கள் ஒவ்வொரு முறையும் இப்படித்தான் வாக்குறுதி கொடுக்கின்றனர். ஆனால் பணம் வந்து சேர்வதில்லை. அதனால் தான் மக்களோடு சேர்ந்து போராட வேண்டும். மக்களுக்கான நியாயத்துக்காக அவர்களோடு நின்று போராட வேண்டும் என்று இந்த போராட்ட களத்துக்கு அமைச்சர்களை, எம்.பி.க்களை முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் கேட்கும் போது, ஒன்றிய அமைச்சர் ஒருவர் மக்கள் தொகை அதிகம் உள்ள உத்தரப் பிரதேசத்தை விடத் தமிழ்நாட்டுக்குத் தான் அதிக நிதி ஒதுக்கி உள்ளதாகத் தவறான தகவலை தருகிறார்.

100 நாள் வேலை திட்டம் ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது கொண்டுவரப்பட்டது. சாமானிய மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் 100 நாள் வேலை கிடைக்க வேண்டும் என்று கொண்டு வந்த திட்டம். ஆனால், மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 100 நாள் வேலை திட்டத்திற்குப் பணத்தை குறைத்துக் கொண்டு வருகின்றனர்.

பா.ஜ.க.வினரின் வேஷம்!

எதிர்க்கட்சிகள் ஆட்சியில் இருக்கக்கூடிய மாநிலங்களில் எதுக்கு கேட்டாலும் ஒன்றிய அரசு பணம் கொடுப்பதில்லை. மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் கல்விக்கான நிதி ரூ. 2,000 கோடி வழங்கப்படும் என்கின்றனர். ஆனால் தமிழர்கள் மீதும் தமிழ் நாட்டின் மீதும் அக்கறை உள்ளவர்கள் போல் பா.ஜ.க.வினர் வேஷமிட்டு வருகின்றனர்.

கல்விக்கும் பணம் வரவில்லை, 100 நாள் வேலைத் திட்டத்திற்கு உழைத்த சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் வரவேண்டிய சம்பளப் பணம் தருவதற்கு ஒன்றிய பா.ஜ.க.விற்கு மனம் வரவில்லை.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2024-25 பட்ஜெட்டில் ரூ.86,000 கோடி 100 நாள் வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கினார். இவ்வளவு குறைவாக ஒதுக்கினால், எப்படி போதும் என்று நாங்கள் கேட்டோம். நிதி தேவை அதிகரித்தல், நாங்கள் அதிகரித்து தரக்கூடிய ஒன்று என்று சொன்னார். அதில், ரூ. 9,754 கோடி அதிகரித்துள்ளது. அடுத்த பட்ஜெட்டில் இந்த பணத்தை சேர்த்துத்தான் போடவேண்டும்.

இந்த வருஷம் 2025-26 பட்ஜெட்டில், அதே ரூ.86,000 கோடி ஒதுக்கினார். இந்த லட்சணத்தில்தான் ஒன்றிய அரசாங்கம் செயல்படுகிறது. சம்பளம் கொடுக்க வழியில்லை, 5 மாதங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். பலமுறை ஒன்றிய அமைச்சர்களை சந்தித்து, எங்களுக்குத் தரவேண்டிய நிதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

களத்தில் இறங்கிப் போராடுவோம்!

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார். முதலமைச்சர் ஒவ்வொரு முறையும் பிரதமரை சந்திக்கக் கூடிய நேரத்தில், இந்த கோரிக்கையை வைக்கிறார். இதற்கு மேல் பொறுத்தது போதும், நாம் களத்தில் இறங்கிப் போராடுவோம், நமக்கு நியாயம் கிடைக்கும் வரை போராடுவோம் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

அதனால், இந்த ரூ.4,000 கோடி வரவில்லை என்றால் நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் போராடும், நமக்கு வரவேண்டிய நிதி வந்து சேரும் வரை தொடர்ந்து போராடுவோம். நம்முடைய உரிமைக்காக, வர வேண்டிய நியமன நிதிக்காக, உழைப்பு வர வேண்டிய சம்பளத்திற்காக, திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் உங்களோடு நின்று போராடும் என்று பேசினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் வீ.முருகேசன், தலைமைக் கழக பேச்சாளர் சரத் பாலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏஞ்சலா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

குளித்தலை நகரில் கடம்பவனேஸ்வரர் கோயில்

திருமண மண்டபத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுமா?

பேரவையில் இரா.மாணிக்கம் கேள்வி!

சென்னை,மார்ச்.31-

குளித்தலை நகரில் கடம்பவனேஸ்வரர் கோயில் திருமண மண்டபத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுமா? என்று பேரவையில் குளித்தலை தொகுதி இரா.மாணிக்கம் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு:-

இரா. மாணிக்கம்: குளித்தலை தொகுதி, குளித்தலை நகரில் உள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கே. சேகர் பாபு: கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு கடந்த ஆண்டு 12.7.2024 அன்று தான் ரூ.50 இலட்சம் செலவில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. அவர் கோரிய திருமண மண்டபம் என்பது 64 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட திருமண மண்டபம். 2007 ஆம் ஆண்டிலிருந்து அது பயன்பாட்டில் இல்லை. வாஸ்துபடி அந்தத் திருமண மண்டபம் அமைந்த இடமும் சரியில்லை என்பதால், பழுதடைந்த அந்த திருமண மண்டபத்தை தற்போது இடித்து அகற்றியிருக்கின்றோம்.

திருமண மண்டபம் வேண்டுமென்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலித்தபோது, அந்தத் திருக்கோயிலுக்கு வைப்பு நிதியும் ரூ.40 இலட்சம்தான் இருக்கின்றது. ஆணையருடைய பொதுநல நிதியும் தரமுடியாத ஒரு சூழல் இருந்தாலும்,



பெரிய திருக்கோயிலிருந்து கடன் பெற்று, அவர் கோரிய அந்தக் கோரிக்கை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, இந்தச் சட்டமன்ற கூட்ட அறிவிப்பிலே அந்தத் திருமண மண்டபம் இடம் பெறும்.

இரா. மாணிக்கம்: குளித்தலை நகரத்திலுள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று, வருங்காலத்திலே கோரிக்கை நிறை வேற்றப்படும் என்று அறிவித்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, குளித்தலை பகுதியில் அமைந்துள்ள அய்யர்மலையில் அமைந்துள்ள இரத்தினகிரிதிருக்கோயில் என்பது சுமார் 1200 படிகள் கொண்ட உயரமான மலை; அந்த மலைக்கு rope car வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கை நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலே அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்பிறகு வந்த ஆட்சியால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டு, மீண்டும் 2021 ஆம் ஆண்டு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய முதல்வரின் ஆட்சியிலே நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முயற்சியிலே, மீண்டும் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டு, அந்தத் திருக்கோயிலுக்கு rope car அமைத்து, அது கடந்த 2024 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் rope car அவர்களால் காணொலி மூலம் திறந்து வைக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையிலே rope car இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, அதற்காக அறிவித்த முதல்வர் அவர்களுக்கும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கடம்பூர் திருக்கோயி லுக்குச் சொந்தமான இடம் காவிரி ஆற்றங்கரையில் ஒரு 15 ஏக்கம் இடம் இருக்கின்றது. அதில் ஆண்டுதோறும் தைபூசம் பௌர்ணமி அன்று திருவிழா நடைபெறும். அந்தத் திருவிழா நடைபெறும்.

அந்தத் திருவிழா நடைபெறும் இடத்தில் பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்கு, நகராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தால் நம்முடைய திருக்கோயிலுக்கும் வருமானம் வரும். எனவே, பொழுதுபோக்கு பூங்கா அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் பொழுதுபோக்கு பூங்காக்கள் அமைப்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை. இருந்தாலும் அவர் கோரியபடி, அங்கு நந்தவனங்களோ அல்லது இளைப்பாறும் மண்டபங்களோ அமைத்துத்தருவதற்குண்டான நடவடிக்கையை நிச்சயம் எடுப்போம்

இரா. மாணிக்கம்: குளித்தலை நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலுக்கும், ராஜேந்திரத்தில் அமைந்துள்ள மத்தியார்சுனேஸ்வரர் திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு எப்போதுத நடைபெறும்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: உறுப்பினர் கோரிய பாலதண்டாயுதபாணி திருக்கோயில் என்பது 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது 5 பணிகள் ஒரு கோடியே இருபத்து ஏழு இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது அந்தப் பணிகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. எவ்வளவு விரைவாக அந்தத் திருப்பணிகளை முடித்து குடமுழுக்கு மேற்கொள்ளப்படுமோ, அவ்வளவு விரைவாக அந்தப் பணிகள் விரைவுப்படுத்தப்படும். அவர் கோரிய இன்னொன்று ஈஸ்வரன் கோயிலிலும், தற்போது திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணியையும் விரைவாக முடித்து, திருகுடத்திற்கு வேண்டிய அனைத்து பணிகளையும் விரைவுப்படுத்தப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

துறையூர் ஊராட்சி ஒன்றியம்

கோம்பை - வண்ணாடு ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடுக!

சட்டப் பேரவையில் துறையூர் செ.ஸ்டாலின் குமார் கோரிக்கை!

சென்னை,மார்ச்.31-

சட்டப் பேரவையில் துறையூர் தொகுதி உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-

செ.ஸ்டாலின் குமார்: துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோம்பை மற்றும் வண்ணாடு ஆகிய ஊராட்சிகளில் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் மா.சுப்பிரமணியன்: துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் கோம்பை, வண்ணாடு ஆகிய இரு ஊராட்சிகள் இருக்கின்றன. கோம்பையைப் பொறுத்த வரை, எட்டு கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சியாகவும், அதனுடைய மக்கள் தொகை 2,039 என்கின்ற வகையிலும், வண்ணாடு என்கின்ற ஊராட்சி எட்டு கிராமங்களை உள்ளடக்கியதாகவும் அதனுடைய மக்கள் தொகை 1,455 என்கின்ற வகையிலும் இருந்து கொண்டிருக்கின்றன.

இந்த இரு ஊராட்சிகளிலும் ஏற்கெனவே இரண்டு துணை சுகாதார நிலையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்த இரண்டு துணை சுகாதார நிலையங்களும் அதற்குட்பட்ட மக்களைப் பொறுத்தவரை இடைநிலை சுகாதார செவிலியர்கள்மூலம் eSanjeevani முறையில் செங்காட்டுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, புதியதாக அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

செ. ஸ்டாலின் குமார்: என்னுடைய துறையூர் தொகுதியில், வண்ணாடு ஊராட்சியில் 21 கிராமங்களிலும், கோம்பை ஊராட்சியில் 12 கிராமங்களிலும் மொத்தம் 33 கிராமங்களில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, சுமார் 18,000 மக்கள்

தொகை இருக்கிறார்கள். இவர்கள் பச்சைமலைமீது இருக்கக்கூடிய பழங்குடியின மக்கள். பச்சைமலையிலிருந்து 45 கிலோமீட்டர் தூரத்திலுள்ள துறையூர் வந்துதான் அவர்கள் மருத்துவ உதவி செய்துகொள்ள வேண்டும். எனவே, அமைச்சர் அவர்கள் மருத்துவ வசதியினை செய்து வருங்காலத்தில் கோம்பை, வண்ணாடு ஊராட்சிக் குட்பட்ட மணலோடை பகுதியில் அதற்கான இடமும் தேர்வு செய்து, கருத்துருக்கள் DD (Deputy Director) மூலம் அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மாண்புமிகுதமிழகமுதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் பச்சைமலைக்கு வந்திருந்தபொழுது அம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இதை அவர்களிடம் வழங்கினார்கள். அவர்களும், ஆட்சி வந்தவுடன் செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நானும், 'மக்களுடன் முதல்வர்' திட்டத்திலும் கோரிக்கையாக வழங்கியுள்ளேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றி தருவாரா?

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: கோம்பையை பொறுத்தவரை, கோம்பை புதூர், குண்டூர், ஏரிக்காடு, எருமப்பட்டி, மருதை, மேலூர், தாளூர், செம்புலிச்சாம்பட்டி என்கின்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. அதேபோல் வண்ணாடு பகுதியை பொறுத்தவரை, இலுப்பூர், புதூர், கிணத்தூர் போன்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஊராட்சிக்குட்பட்டவை, 8 கிராமங்கள், 8 கிராமங்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் 30, 40 கிராமங்களெல்லாம் இல்லை. வேறு ஊராட்சியில் இருப்பதையெல்லாம் சேர்த்து சொல்கிறார்கள். இங்கு இரண்டு துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, இன்னும் ஒரு புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

செ. ஸ்டாலின் குமார்: என்னுடைய துறையூர் தொகுதியில், பச்சபெருமாள்பட்டி, தளுகை இது இரண்டும் எங்களுடைய மாவட்டத்தின் கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஊர். இதற்கும், ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதேபோன்று, பகளவாடி, வெங்கடேசபுரம், கீரம்பூர் பகுதியில் இருக்கக்கூடிய துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே, அதற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கும், அதேபோன்று, மருவத்தூர் பகுதிக்கு துணை சுகாதார நிலையம் வேண்டுமென்று ஏற்கெனவே கருத்துரு அனுப்பப்பட்டுள்ளன. துறையூரில் இருக்கக்கூடிய தாலுகா மருத்துவமனைக்கு புறநோயாளி பிரிவிற்கு புதிய கட்டடமும், அதேபோன்று உப்பிலியாபுரத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளி பிரிவிற்கு புதிய கட்டடமும் கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: ஒன்றிய அரசின் விதிமுறைகளின்படி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் சமதள பகுதியில் அமைய வேண்டுமென்றால், 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். மலைக் கிராமங்கள் என்றால், 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். துணை சுகாதார நிலையம் அமைய வேண்டுமென்றால், சமதள பகுதியில் 5,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். கிராமப்புறங்களில் 3,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதை அன்புகூர்ந்து. . .

அவையெல்லாம் சமதளபகுதியில் வந்துவிடும். 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகளின்படி இருக்கின்றதா என்பதை நாம் வரையறுத்துக்கொள்ள வேண்டும். அதில் எத்தனை துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்பதை கணக்கில் வைத்துக்கொண்டு அதற்கு பிறகு கேட்கலாம். தமிழ்நாட்டை பொறுத்தவரையிலும் 80 ஆயிரம் hamlet villages இருக்கின்றன. அனைத்து villagesக்கும் ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்பது எல்லோருடைய கோரிக்கையாக இருக்கும், மக்களுடைய விருப்பமும் இருக்கும். அதை நிறைவேற்றுவதற்கு அரசு விதிமுறைகளில் இடம் கிடைக்க வேண்டும். ஆனாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, எதிர்காலத்தில் புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.